1



இத்தாலியின் மாவீரர் மாஜினி

அடிமைப்பட்டுக் கிடந்த நாடுகள் ஒவ்வொன்றின் வரலாறுகளையும் புரட்டிப் பார்த்தால் அவை சுதந்திர நாடுகளாக உருவாகக் காரணமாக இருந்தவர்கள் விடுதலை ஆர்வமிக்க சில வீரர்களே என்பதைக் காணலாம். ஒவ்வொரு நாட்டிலும் ஒரு வீரர் துணிவுடன் மக்களின் அடிமைத்தனத்தைச் சுட்டிக்காட்டி அவர்களுக்குச் சுதந்திர வேட்கையை ஊட்டி எழுச்சியுறச் செய்கிறார். இதனால் அவருக்கு ஏற்படும் தொல்லைகள் கொஞ்சமல்ல. ஆயினும் தான் எடுத்துக்கொண்ட கொள்கையில் புது உலகை உருவாக்க முயன்று வெற்றியும் பெறுகிறார்.

அப்படி அஞ்சா நெஞ்சுடன் உலகைச் சீர்திருத்தப் புறப்பட்ட வீரர்களிடம் காணப்படும் பண்பு, அவர்களுடைய உழைப்பு, ஆற்றலுடன் செயல்படும் விதம், உண்மையுடனும், உறுதியுடனும் உள்ளத்தைப் பதிய வைத்து தளராத உள்ளத்துடன் தங்களது லட்சியப் பாதையில் சென்று வெற்றியடைகிறார்கள்.

சிலர் மக்களுக்கு விழிப்புணர்ச்சியூட்டி போராட்டத்தில் பங்கு கொள்ளச் செய்து தங்கள் நாட்டின் மீது அதிகாரம் செலுத்தி ஆட்சி செய்து வந்த வேற்று நாட்டாரை அகற்றிச் சுதந்திர பூமியாக மலரச் செய்கிறார்கள். அப்படிப்பட்ட மாவீரர்களில் ஒருவரே இத்தாலியைச் சுதந்திர நாடாக உருவாக்கிய மாஜினி.


புகழ்மிக்க கொலம்பஸ் பிறந்த ஊரான இத்தாலியில் உள்ள ஜினோவா என்ற நகரத்திலே தான் 1805 ஆம் ஆண்டு ஜூன் 22 ஆம் தேதி மாஜினி பிறந்தார். இயற் பெயர் ஜோசப் மாஜினி. மாஜினியின் தந்தை ஒரு மருத்துவ நிபுணர். ஜினோவாவில் உள்ள பல்கலைக் கழகத்தில் விரிவுரையாளராகவும் பணியாற்றி வந்தார்.

மிகவும் ஒல்லியாகக் காணப்பட்ட மாஜினி சிறு வயதிலேயே எதிலும் ஆர்வம் கொண்டு கற்கத் தலைப் பட்டார். முதன் முதலாக வீட்டிலேயே ஆசிரியர் மூலம் கல்வி கற்க ஏற்பாடாகியது. லத்தீன் மொழியைக் கற்றார். கிரேக்க, ரோம. இதிகாசங்கள். காவியங்கள் முதலியவற்றைத் தன்னுடைய பன்னிரண்டாவது வயதுக் குள்ளேயே படித்து முடித்துவிட்டார். அதில் வரும் வீரர்களின் வாழ்க்கை, சாகசங்கள், அரசியல் நிலைமைகள் முதலியன அவர் மனதில் நன்றாகப் பதிந்து அவரைச் சிந்திக்க வைத்தன.

அவர் வளர்ந்த பிறகு எழுதிய இலக்கியம் தொடர்பான புத்தகங்கள் இன்றைக்கு ஐரோப்பியர்களின் இலக்கிய ஆராய்ச்சிகளுக்கு மிகவும் உதவியாயிருக் கின்றன. தெளிவான சிந்தனை. நீரோடை போன்ற நடை ஆகியன இவரது எழுத்துக்களின் சிறப்பம்சமாகும். சிறு வயதில் அவர் படித்த கிரேக்க, ரோம இதிகாசங்களே இதற்குக் காரணம் ஆகும்.

தன்னுடைய பன்னிரண்டாவது வயதில் முதன் முதலாகப் பள்ளியில் சேர்ந்தார். வீட்டில் இருந்து அதுவரை கற்ற படிப்பு அவருக்குத் துணை செய்தது. இரண்டிரண்டு வகுப்புகளாகத் தேர்ச்சி பெற்று 1826ஆம் ஆண்டு தன்னுடைய 22ஆவது வயதிலேயே சட்டப் படிப்பில் பட்டம் பெற்றார்.

மாஜினியிடம் இருந்த சுறுசுறுப்பு. விவாதம் செய்யும் திறன், உடனுக்குடன் எடுக்கும் முடிவு ஆகியவற்றின் மூலம் தான்படித்த கல்லூரியிலே மாணவர்கள் – ஆசிரியர்களிடையே பிரபலமானார். அதேபோல வக்கீல் தொழிலிலும் பிரபலமானார். இத்தாலியின் இலக்கிய மறுமலர்ச்சிக்கு தன்னுடைய சிறப்பான ஆராய்ச்சிக் கட்டுரைகளால் மகுடம் சூட்டியவர் மாஜினி. 21 வயதுக் குள்ளேயே இலக்கியம் தொடர்பான கட்டுரைகளை எழுதினார். பிறகு, புரட்சியாளராக மாறிய பிறகு இலக்கிய வளர்ச்சியில் ஈடுபட முடியவில்லை. எழுதியவை சில கட்டுரைகள்தான் என்றாலும் அவற்றின் மூலமாகவே மாவீரர் மாஜினி இத்தாலிய இலக்கியத்தில் சிறப்பான இடத்தில் வைத்துப் போற்றப்படுகிறார்.




இலக்கிய ஈடுபாடு கொண்ட சட்ட நிபுணரான மாஜினி மாவீரராக உருவானது ஒரு சுவையான வரலாறு. மாஜினியின் தந்தை ஜியோக்கொமோ மாஜினி, பிரான்சில் இருந்து வெளிவந்து கொண்டிருந்த குடியரசுக் கட்சிப் பத்திரிகையை சந்தா கட்டி ரகசியமாகத் தருவித்துப் படித்து வந்தார்.

அந்தப் பத்திரிகைமூலம் பிரெஞ்சுப் புரட்சி நடை பெற்றதையும், அது தோல்வி அடைந்ததற்கான காரணத்தையும், பிரான்சில் நடக்கும் கொடுங்கோல் ஆட்சி உருவான விதத்தையும் படித்தறிந்தார் தன்னுடைய பன்னிரண்டாவது வயதுக்குள்ளேயே. மேற்படி பத்திரிகையைத் தருவித்துப் படிப்பதை அரசாங்கம் கேள்வியுற்றாலே உடனே சிறையில் தள்ளிவிடும். 1815–ல் நெப்போலியனின் வீழ்ச்சி ஏற்பட்டது.

பீட்மாண்ட் அரசர் இந்த வீழ்ச்சியைப் பயன்படுத்திக் கொண்டு லிகூரியா மாநிலத்தைச் சேர்ந்த ஜினோவா நகரத்தைக் கைப்பற்றித் தன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தார். ஜினோவா நகர மக்கள் இதனால் மிகவும் வெறுப்படைந்தார்கள். இதே பீட்மாண்ட் அரசரின் பீட்மாண்ட் பகுதியில் இவரது கொடுங்கோல் ஆட்சியை எதிர்த்துக் கார்பனேரிகள் புரட்சி செய்தார்கள். அந்தப் புரட்சி பீட்மாண்ட் அரசரால் ஒடுக்கப்பட்டது.

அப்புரட்சியில் கலந்து கொண்ட பலர் பீட்மாண்டில் இருந்து தப்பித்து ஜினோவா நகருக்கு வந்தார்கள். வந்தவர்கள் தங்களுடைய சுய கௌரவம், படிப்பு முதலியவற்றை எண்ணாமல் ஜினோவா நகரமக்களிடம் பிச்சை எடுத்து, தங்கள் உயிரைக் காக்க ஸ்பெயினுக்குச் சென்றார்கள். தலைமறைவாக இருக்க கப்பல் கட்டணத்திற்காகவே பிச்சை எடுத்தார்கள்.

பிரெஞ்சுப் புரட்சிபற்றி சிறுவயதில் படித்தது, கொடுங்கோல் ஆட்சிக்குப் பயந்து சுதந்திர நாடாக உருவாக்க புரட்சி செய்யும் வீரர்கள், அதனால் சிறைப்பட்ட வீரர்கள், தப்பி வந்த வீரர்கள், இப்படிப்



பிச்சை எடுப்பது ஆகிய இந்தச் சம்பவங்கள் எல்லாம் சேர்ந்து மாஜினியின் மனதில் ஒரு புதுவேகத்தை உண்டு பண்ணின.

வக்கீல் தொழிலில் பணமே வாங்காமல் ஏழைகளுக்காக வாதாடிய மாஜினி தன்னுடைய நாட்டை அந்நிய ஆதிக்கத்திலிருந்து விடுவித்து சுதந்திர நாடாக உருவாக்கத் தன் வாழ்க்கையையே அர்ப்பணம் செய்யத் தீர்மானித்தார்.

இத்தாலியக் கவிஞரான தாந்தேயின் கவிதைகளும், ஆங்கிலக் கவிஞராகிய பைரனின் கவிதைகளும் மாஜினிக்கு தேசப்பற்றை ஊட்டின. இலக்கியம் என்றால் அரசியல், சமுதாய நோக்கத்தோடு இருக்க வேண்டும்.


இந்த இரண்டையும் இணைத்து சமுதாய நோக்கோடு தேசியப் பற்றை ஊட்டும் கட்டுரைகளை எழுதி பத்திரிகைகளுக்கு அனுப்பினார். வருமானம் இல்லாத வக்கீல் தொழில் அவருக்கு வெறுப்பைத் தந்தது. மேலும் தொழிலில் ஈடுபட்ட நேரம் போக எஞ்சிய நேரத்தில் தேசப்பற்றைத் தட்டி எழுப்பும் கட்டுரைகளை பத்திரிகைகளுக்கு எழுதி அனுப்பினார். ஆயினும், தனக்குத் தானே இவைமட்டும்தானா தன் வாழ்வின் கடமை என்று சிந்தித்து, அதன் விளைவாக அரசியலில் முழு மூச்சாக ஈடுபட்டுத் தன் தாய் நாட்டைச் சுதந்திர நாடாக ஆக்க விரும்பினார்!

இத்தாலி நாட்டை ஜெர்மனி, ஆஸ்திரியா, பிரான்ஸ் ஆகிய மூன்று வல்லரசுகளும் மூன்றாகப் பிரித்தன. ஜெர்மனி நேப்பிள்ஸையும். ஆஸ்திரியா மிலானையும் பிரான்ஸ் ரோமையும் ஆண்டுவந்தன. இத்தாலி மூன்று கூறுகளாகி இந்த மூன்று வல்லரசுகளின் சர்வாதிகார ஆட்சிகளின் கீழ் இருந்தது. இந்த மூன்று வல்லரசு நாடுகளின் பிடியில் இருந்து இத்தாலியை விடுவிக்க நிறையத் துன்பங்களைச் சந்திக்கவேண்டும் என்பது தெரிந்தும் அவற்றையெல்லாம் சந்திக்கத் தயாரானார்.

கார்பனேரி என்ற சங்கம் இந்தக் கொடுங்கோலர்களின் ஆட்சியை எதிர்த்தது. இது ஓர் அரசியல் கட்சியாகும். இச் சங்கத்தின் ஜினோவா நகரக்கிளையில் மாஜினி முதன் முதலாக உறுப்பினராகச் சேர்ந்தார். சுதந்திர வேட்கையைத் தூண்டும் விதமாக அரசியல் கட்டுரைகளை எழுதினார். இலக்கியக் கட்டுரைகளுக்கு முற்றுப்புள்ளி வைத்தார். அவருடைய துடிப்புமிக்க கட்டுரைகள் பலரது கவனத்தைக் கவர்ந்தன. முக்கியமாக ஆட்சியாளர்களையும் கவர்ந்தது. அதன் விளைவாகத் தீவிரமாகக் கண்காணிக்கப்பட்டார்.

1830 ஆம் ஆண்டு ஜூலை மாதம் பிரான்சில் ஒரு புரட்சியை ஏற்படுத்தத் திட்டமிட்டு கார்பனேரி சங்கம் போராட்டம் ஒன்றைத் தொடங்கியது. இப்போராட்டத்தில் கார்பனேரி சங்கத்தின் உறுப்பினரான மாஜினியும் கலந்துகொண்டார். ஏற்கனவே, கண்காணிக்கப்பட்டுவந்த மாஜினி இப் போராட்டத்தின் போது கைது செய்யப்பட்டு ஆறுமாத சிறைத் தண்டனை அடைந்தார். பிரான்ஸை எதிர்த்த முதல் எதிரியாக அரசாங்கம் அவரைக் கருதியது. ஜினோவோ நகருக்கு மேற்கே உள்ள சவோனா என்ற சிறைச்சாலையில் அடைக்கப் பட்டு தண்டனைக்காலத்தை அங்கே கழித்தார். இந்தச் சிறைச்சாலைதான் அவனது இத்தாலிய இளைஞர் இயக்கம் தொடங்கப்படக் காரணமாக இருந்தது.

கார்பனேரி சங்கத்தின் மூலம் இளைஞர்கள் எழுச்சி பெற்று இத்தாலியை மீட்க வழியில்லாமல் இருந்தது. அங்கே முதியவர்கள் கதை பேசியே காலத்தைக் கழித்தனர். முதியவர்கள் போராட்டத்தில் ஈடுபடாவிட்டாலும், போராட்டத்தில் ஈடுபடமுன்வந்த இளைஞர்களை ஊக்கு விக்கவும் இல்லை. இந்த நிலையில் மக்களை உற்சாகப்படுத்தி சுதந்திர வேட்கையை ஊட்டி எழுச்சியுறச் செய்து அவர்களே அரசாங்கத்தை எதிர்க்கும்படி செய்ய வேண்டும். இந்த எண்ணத்துடனேயே இத்தாலிய இளைஞர் இயக்கத்தைத் தோற்றுவித்தார் மாஜினி. இத்தாலிய மக்களில் பலர் தன் வழியில் வருவார்கள் என நினைத்தார். மக்களின் ஒற்றுமையைத் திரட்டி அரசாளும் மன்னர்களை எதிர்க்கவேண்டும். பயந்து பயந்து சாவதைவிட பெருமுயற்சியுடன் ஈடுபட்டு



இதில் வெற்றி பெற வேண்டும். சோம்பலே கூடாது. இவைகளையே மூலதனமாகக் கொண்டு இத்தாலிய இளைஞர் இயக்கத்தைச் செயல்படுத்தி வெற்றி பெறச் செய்யவேண்டும் என்றெல்லாம் சிந்தித்து மாஜினி தனக்குள் முடிவு செய்து கொண்டார். "அறிவின் அறிகுறி இடைவிடாத முயற்சி: வெற்றியின் அறிகுறி சோர்வடையாத உழைப்பு" என்றெல்லாம் மக்களிடம் எடுத்துரைக்க விரும்பினார்.

ஆறு மாதச் சிறைத் தண்டனை முடிந்தது. மாஜினி நாட்டின் எதிரி என்று அரசாங்கத்தால் நிரூபிக்க முடியவில்லை. எனவே ஆறுமாதத் தண்டனையுடன் விடுதலை செய்து இனிமேல் பிரான்ஸ் நாட்டு எல்லைக்குள் வசிக்கக் கூடாது என்றும் உத்தரவு இட்டது. நாடு கடத்தப்பட்ட மாஜினி மார்சேல்ஸுக்குப் பயணம் மேற்கொண்டார்.

1831ஆம் ஆண்டு நாடு கடத்தப்பட்ட மாஜினி மார்சேல்ஸ் நகரத்தை அடைந்ததும் அங்கே தன்னைப் போன்ற இத்தாலியர்கள் சிலர் இருப்பதைக் கண்டறிந்தார். அவர்களும் நாடு கடத்தப்பட்டவர்களே என்பதை அறிந்து அவரது மனக்கொதிப்பு அதிகமாயிற்று. அந்த இத்தாலியர்களை ஒன்று திரட்டித் தனது கனவான இத்தாலிய



இளைஞர் இயக்கத்தின் அமைப்புக் கூட்டத்தை சிறிய அறையொன்றில் கூட்டினார்.

இந்தத் தலைமுறையிலேயே சுதந்திரக் குடியரசு நாடாக இத்தாலியை உருவாக்க வகுக்கப்பட்ட தனது திட்டங்களை அந்த இளைஞர்களிடம் விவரித்தார். அவர்களும் மாஜினியைத் தங்கள் தலைவராக ஏற்றுக்கொண்டு ரகசியமாக இச் சங்கத்தின்மூலம் இத்தாலியின் சுதந்தரத்துக்குப் பாடுபடலானார்கள். இச்சங்கத்தைப் பகிரங்கமாக அறிவித்தால் அதனால் ஆட்சியாளர்களின் இன்னல்களுக்குள்ளாகி தண்டனையடையவும் நேரும் என்பதால் இரகசியமாக மக்களிடையே தொடர்பு கொண்டு இத்தாலியை மீட்க எண்ணி அதற்கேற்றபடி திட்டங்களையும் வகுத்தார், மாஜினி.

முதலில் சுமார் இருபது பேர்கள் மட்டுமே இச்சங்கத்தில் இருந்தார்கள். இவர்கள் ஓர் அச்சகம் ஒன்றை அமைத்துக்கொண்டு, தினசரி துண்டுப் பிரசுரங்களை அச்சடித்து அவைகளை ரகசியமாக இத்தாலிக்கு அனுப்பி மக்களிடையே விநியோகித்து வந்தனர். நாளடைவில் மாஜினியின் தலைமையில் இவ்வாறாக இணைந்த இவ்வீரர்களைக் கொண்ட சங்கம் இரண்டே ஆண்டுகளுக்குள் அறுபதாயிரம் உறுப்பினர்களைக்கொண்ட மிகப் பெரும் இயக்கமாக வளர்ந்தது. இத்தாலியில் உள்ள மாஜினி பிறந்த ஊரான ஜினோவாவிலும் இச்சங்கத்தின் கிளை உருவாயிற்று. இச்சங்கத்தில் நாற்பது வயதிற்குக் கீழே உள்ளவர்கள் தான் உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட்டார்கள்.

இச்சங்க உறுப்பினர்களின் ரகசியப் பிரச்சாரம், மாஜினியின் துண்டுப் பிரசுரங்கள் ஆகியன மக்களிடையே விழிப்பை ஏற்படுத்தியது. மாஜினியின் தேசபக்தியும் அவரால் தோற்றுவிக்கப்பட்ட சங்கமும் மக்களுக்கு சுதந்தர உணர்வை ஊட்டி மாஜினி என்ன சொன்னாலும் செய்யத் தயார் என்ற நிலைக்கு மக்களைத் தயார்ப்படுத்தியது.

தீவிரமான தேசப்பற்று மிக்க பத்திரிகைகளிலும் அரசியல் கட்டுரைகளை எழுதினார். "ரோம், நேபிள்ஸ். மிலான் ஆகிய நமது தாய் நாடுகளின் மீது நமது சுதந்திரக் கொடி பறக்க வேண்டும். அங்கே பறக்கும் அந்நிய நாட்டாரின் கொடிகள் அகற்றப்படவேண்டும். நாம் போராடிப் பெறும் சுதந்திரம் நமது சந்ததியினரும் சுதந்திரமாக வாழத்தான் என்பதை அனைவரும் உணரவேண்டும். இன்றே, இக்கணமே, அதைச் செய்யவேண்டும். களத்தில் இறங்குவோம்" என்று பத்திரிகை ஒன்றில் எழுதினார்.

இதைப் படித்த மூன்று வல்லரசு நாடுகளும் கொதித்தெழுந்தன. மூன்று வல்லரசு நாடுகளும் அவரை வளைத்துப் பிடிக்கத் துடித்தன. மாஜினி அவர்களிடம் பிடிபடாமல் ஒவ்வொரு நாடாகச் சென்று தலைமறைவாக வாழ்ந்து வந்தார். அப்படி இருந்தும் அவர் இத்தாலியோடு எப்போதும் தொடர்பு கொண்டிருந்தார். மூன்று வல்லரசு நாடுகளும் 1833 ஆம் ஆண்டு ஒரு புது உத்தரவை அமலுக்குக் கொண்டுவந்தன.

இத்தாலிய இளைஞர் இயக்கத் தில் யாராவது உறுப்பினராகச் சேர்ந்தால் உடனே அவர்களுக்குத் தூக்கு தண்டனை விதிக்கப்படும் என்ற சட்டத்தைக் கொண்டு வந்தன. தலைமறைவாக வாழ்ந்து கொண்டிருந்த மாஜினி கடைசி யாக கடல் நடுவில் உள்ள பயங்கரத் தீவான கார்சிகாத் தீவை அடைந்தார். இத்தீவு நெப்போலியனால் உருவாக்கப் பட்டதாகும்.

மாஜினி எப்போதும் சிவப்பு நிற உடையைத்தான் அணிந்து வந்தார். விடுதலைப் பணியில் சிறப்புடனும் சுறுசுறுப்புடனும் ஈடுபட சிவப்பு நிற உடை உதவும் என்று நம்பினார். கார்சிகாத் தீவை அடைந்ததும் பகுத்தறிவுவாதியான மாஜினி தானும் தன் புரட்சிப்படை வீரர்களும் கறுப்பு நிற உடைகளையே இனிமேல் அணிய வேண்டும் என்று விரும்பினார். அவ்வாறே இத்தாலியில் உள்ள வீரர்களுக்கு கறுப்பு நிற உடைகளை அணியுமாறு செய்தியும் அனுப்பினார்.

கார்சிகாத் தீவில் இருந்த போது சார்டீனியா என்ற நாட்டு மன்னருடன் தொடர்பு கொண்டார், மாஜினி. சார்டீனியா நாட்டு மன்னரான சார்லஸ் ஆல்பர்ட் ஒரு விடுதலை வீரர். சுதந்திர வேட்கையுடைய சார்லஸ் ஆல்பர்ட்டிற்கு தனக்கு உதவி செய்யும்படி கடிதம் ஒன்று எழுதினார் மாஜினி.

இக் கடிதத்தின் மூலம் அவர் இருக்குமிடம் தெரிந்து கைது செய்யப்பட்டார்.



ஒரு நாட்டைக் கவிழ்ப்பதற்காக இன்னொரு நாட்டின் உதவியை நாடிய குற்றத்திற்காக மாதினிக்கு மரண தண்டனை விதித்துத் தீர்ப்புக் கூறப்பட்டது.

மாதினிக்கு மரண தண்டனையை நிறைவேற்ற மறுநாள் காலை சிறைக்குச் சென்றார்கள். வெகுகாலங்களில் விலங்குபூட்டப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டிருந்த மாதினியை அங்கே காணவில்லை. மாதினி ரஷ்ய சாகசம் செய்து தேர அங்கிருந்து தப்பியோடி விட்டார்.

தப்பியோடிய மாதினி பூதேரப்பட்டில் ரஷ்ய பத்திரிகையைத் தொடங்கினார். அப் பத்திரிகையில் இத்தாலிய இளைஞர் சங்கப் பணிகள் முதலில் தேசாய நகரைப் பிடிக்கவேண்டும் என எழுதினார். சங்கத்தினரும் மக்களும் தேரவேண்டும் என்று கூறினார். முதலில் தனது எழுத்துக்களால் மக்கள் மனதில் கரம் ஏற்றினார். இத்தாலிய இளைஞர் சங்கத்தில் பயிற்சி பெற்ற வீரர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து தான் உருவாக்கிய கொரில்லாப் போர்வீரர்களையும் அழைத்துக் கொண்டு 1914 ஆம் ஆண்டு தேசாய நகருக்குள் நுழைந்து கைப்பற்றினார். முதல் போரை மாபெரும் வெற்றியாக அமைந்தது.

மாதினியின் இந்த வெற்றி பல வல்லரசு நாடுகளுக்கு அச்சமூட்டியது. அதேபோல அந்திய நாட்டின் பிடியில் சிக்கிய மற்ற நாடுகளும் சுதந்திரமடைய புரட்சி இயக்கங்களைத் தொற்றுவிக்க மாதினியின் இந்த வெற்றியே அடிப்படைக் காரணமாக அமைந்தது.

தங்கள் லட்சியமான சுதந்திரக் குடியரசு நாட்டைப் பற்றி பல வெளிநாடுகளுக்கு விளக்க தூதரகப்பிய இளைஞர் சங்கம், கவிஸ்லாந்து இளைஞர் சங்கம், எஸ்ற இரு அமைப்புகளைத் தொற்றுவித்தார். எங்கேயிருந்தாலும், இத்தாலிக்கு திரும்பும் துவங்கப்பட்ட பிரகாங்களை அனுப்பவும், அவ்வப்போது தன்னுடைய வீரர்களுடன் தொடர்பு கொண்டு அவர்கள் செய்யவேண்டிய பணிகளைத் தெரிவிக்கவும் தவறவில்லை.

ஆங்கிலேயர்களுக்கு தங்கள் லட்சியத்தை விளக்கவும், தேசாய நகரைக் கைப்பற்றியது பற்றி விளக்கவும், 1917 ஆம் ஆண்டு லண்டனுக்குப் பயணமானார். லண்டன் வந்து அதற்குமுன் ஸ்விட்சர்லாந்தில் தான் மாதினி தங்கினார். அங்கேயிருந்த சில நண்பர்களின் விருப்பப்படியும் சிறிது மாறுதலுக்காகவும் ஸ்விட்சர்லாந்தில் சில காலம் தங்கியிருக்க நேர்ந்தது.

பின் மாதினி லண்டன் வந்து அடைந்த போது அவருக்கு 32 வயது. முதலில் லண்டனில் ஆங்கிலத்தைக் கற்றுத் தேர்ச்சி பெற்றார். ஏனெனில் தன் கருத்துக்களை ஆங்கிலேயர்களுக்கு விளக்கி எழுத ஆங்கிலம் அடிப்படையாகத் தேவைப்பட்டது. இத்தாலி நாட்டில் தன் தலைமையில் தோன்றிய இயக்கத்தைப் பற்றி பல கட்டுரைகளை ஆங்கிலத்தில் எழுதி லண்டன் பத்திரிகைகளில் வெளியிட்டார். இக்கட்டுரைகளைப் படித்த ஆங்கிலேயர்கள் மாதினி மீது கொண்டிருந்த தவறான கருத்துக்களை விடுத்து அவரது பரந்த அரசியல் பார்வை, மனிதநேயம், சமுதாய நோக்கு முதலியவற்றைக் கண்டு பாராட்டி அவருக்கு "உலக அரசியல் அறிஞர்" என்ற பட்டத்தைக் கொடுத்தார்கள். 1919 ஆம் ஆண்டில் லண்டனில்

மனிதனுடைய கடமைகள், மால்டா மேரியர் என்ற இரண்டு புத்தகங்களை எழுதி வெளியிட்டார்.

இதே 1839 ஆம் ஆண்டில் மாஜினியின் படைத் தலைவரிடம் இருந்து தகவல் பறக்க உடனே புறப்பட்டார். மிலான், மஸாய்னா என்ற இடங்களில் புரட்சி ஏற்பட்டது. இதற்குத் தலைமை தாங்கிப் போரிட லண்டனிலிருந்து உடனே திரும்பினார். மாஜினியின் தலைமையில் புறப்பட்ட புரட்சிப்படை சார்லஸ் என்ற காசரை மிலானில் வென்றது. மிலானை சுதந்திர நாடாக வெற்றிபெறச் செய்தார்.

இவரது இந்தச் செயலைக் கண்டித்து மூன்று வல்லரசு நாடுகளும் ஒன்றிணைந்து மரணதண்டனை விதித்தன.

மாஜினி அஞ்சவில்லை. இரண்டாவது முறையும் மரணதண்டனைக்கு உள்ளானது குறித்து மகிழ்ச்சி அடைந்தார். சுதந்திரத்துக்கு விலையாகத் தன் உயிரைக் கொடுப்பதற்காக மகிழ்ச்சியடைந்தார். இத்தாலி சுதந்திர நாடாக மலரவேண்டும். அது ஒன்றுதான் லட்சியம் என்று மரணதண்டனை அறிவிக்கப்பட்ட பின்பும் கூறினார்.

இரண்டாவது முறையாக மாஜினிக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது குறித்து இத்தாலிய மக்களிடையே பெரும் கொந்தளிப்பு ஏற்பட்டது. நாடெங்கும் கடையடைப்புகள், கறுப்புச் சட்டை ஊர்வலங்கள், கண்டனக் கூட்டங்கள் முதலியவை நடத்தப்பட்டன.

பொதுவுடைமைக் கொள்கையின் தந்தையான கார்ல் மார்க்ஸ் ஜெர்மனியில் பிறந்தவர். அவரே பொதுக்கூட்டம் ஒன்றில் மாஜினியை ஆதரித்துப் பேசினார். "உலக அரசியல் மேதையும், இலக்கிய எழுத்தாளருமாகிய மாஜினிக்கு மரண தண்டனை கிடைத்துள்ளது. உலகத்தில் மிகச் சிறந்த சுதந்திர வீரராகக் கருதப்படும் மாஜினிக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டால் அது உலகிற்கே மாபெரும் இழப்பாகும். குடியரசு நாட்டை விரும்புவோரும் ஜனநாயகத்தை விரும்புவோரும் இந்தச் செய்கையைச் சிறிதும் விரும்ப மாட்டார்கள்.

இத்தாலி நாடு மட்டுமல்ல. உலகில் உள்ள அனைத்து நாடுகளுமே மாஜினியின் விடுதலைக்குக் குரல் எழுப்ப வேண்டும். முதலில் அவர்தான் விடுதலை பெறவேண்டும். இத்தாலி நாட்டு விடுதலையைப் பின்னால் பார்த்துக் கொள்ளலாம். நமது குரல் இத்தாலிய நாட்டுப் பாராளுமன்றத்திற்குச் செல்லவேண்டும். மரண தண்டனை நிறைவேற்றப்பட்டால் இத்தாலிய நாட்டு அரசாங்கமே அடித்து நொறுக்கப்படும். இதுவே நமது எச்சரிக்கை. நமது வேண்டுகோள்" என்று கார்ல் மார்க்ஸ் மிகவும் உணர்ச்சி பொங்கப் பேசினார்.

மார்க்ஸின் இந்தப் பேச்சு இத்தாலிக்கும் எட்டியது. இத்தாலிய மக்கள் "மாஜினியை உடனே விடுதலை செய்" என்று கோஷமிட்டவாறே பல ஊர்வலங்களை மீண்டும் நடத்தினார்கள். மாஜினியின் படைத்தலைவர்களும் அங்கேயே கண்டனக் கூட்டங்களை நடத்தினார்கள்.

தேவாலயத்துக்குச் செல்வதைக் கட்டாயப்படுத்தக் கூடாது என்ற கொள்கையுடையவர் மாஜினி என்பதால் போப் ஆண்டவரின் கோபத்திற்கும் ஆளானார். மாஜினியின் தற்போதைய

நிலைமையில் அவரை விடுதலை செய்யக்கூடாது என்று கூறி உடனே மரண தண்டனையை நிறைவேற்றும்படி இத்தாலியை ஆண்டு வந்த மூன்று வல்லாரசுகளையும் கேட்டுக் கொண்டார், போப் ஆண்டவர். கிரியா நாட்டு மன்னர் குழம்பினார். ஏற்கனவே மாஜினி மிலான் நாட்டை புரட்சியினால் சுதந்திர நாடாக ஆக்கிவிட்டார். இனி மாஜினியை விட்டு வைத்தால் ஆபத்து. கொன்றாலோ மீண்டும் புரட்சி ஏற்பட்டு விளைவுகள் கடுமையாக இருக்கும். என்ன செய்வது? என்று யோசித்தார்.

இறுதியாக மக்கள் எழுச்சியைச் சமாளிக்க முடியாது. எனவே, மாஜினியை விடுதலை செய்வதே நல்லது என்று நினைத்து அவரை விடுதலை செய்தார் மன்னர்.

சுதந்திர பூமியான மிலானில் நடந்த பாராளுமன்றத் தேர்தலில் மாஜினி வெற்றி பெற்றார். பாராளுமன்றத் தலைவராகவும் ஆனார். ஆனால் அந்தப் பதவியை அவர் ஏற்றுக்கொள்ளவில்லை. மக்களை ஆட்சி செய்வதும், தனக்கு அடங்காதவர்களைச் சிறையிலிடுவதும்தான் மன்னராட்சி. இந்த ஆட்சி முறையை ஒழித்து மக்களைச் சுதந்தரமானவர்களாக்கவே பாடுபட்டு வெற்றியும் பெற்றவர் மாஜினி. எனவே அந்தப் பதவியை வெறுத்து எல்லோரும் சேர்ந்து நாட்டை வளப்படுத்த வகை செய்யும் பொருட்டு பாராளுமன்றத் தலைவராக அவரே இன்னொருவரைத் தேர்ந்தெடுத்தார்.

இந்தச் சமயத்தில் லண்டனில் மாநாடு ஒன்றில் கார்ல் மார்க்ஸ் பேசப் போவதைப்பற்றி அறிந்தார். ஏற்கெனவே அவர் கார்ல் மார்க்ஸின் எழுத்துக்களைப் படித்திருக்கிறார். ஆனால் அவருடைய சொற்பொழிவை நேரில் கேட்டதில்லை. தவிர, தனது மரணதண்டனையைத் தடுப்பதற்காகக் கண்டனக் கூட்டம் நடத்தியதற்காகவும் அந்தப் பெரியவரைச் சந்திக்க ஆவலாக இருந்தார். எனவே உடன் லண்டனுக்குப் புறப்பட்டார்.

"மதத்தை முற்றிலும் ஒழிக்கவேண்டும். பொருளாதாரத்துறையில் அனைத்து தொழில் துறைகளும் அரசாங்கத்தின் பிடியிலேயே இருக்கவேண்டும்" என்று கார்ல் மார்க்ஸ் லண்டனில் நடைபெற்ற மாநாட்டில் பேசினார். இதைக் கேட்ட மாஜினி வேதனையடைந்தார்.

தேவாலயத்துக்குச் செல்வதைக்கூட யாரும் கட்டாயப் படுத்தக்கூடாது என்ற கொள்கையையுடைய மாஜினியால், மார்க்ஸின் கருத்துகளை ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

பொருளாதாரத் துறையைப் பொறுத்த வரையில், சில தொழில்கள் அரசாங்கத் திடமும் சில தனியாரிடமும் இருக்க வேண்டும் என்ற கலப்புப் பொருளாதாரக் கொள்கையை உடையவர் மாஜினி. சில தொழில்கள் அரசின் மூலம் நடந்தால் ஊழல் பெருகி தொழில் வெற்றி பெறாமல் போகும். எனவே இந்த மாதிரி குறிப்பிட்ட சில தொழில்களை தனியாரிடம் ஒப்படைப்பதே சிறப்பு என்று கருதினார். கார்ல் மார்க்ஸின் பொருளாதார கொள்கையும் தனது கலப்பு, பொருளாதாரக் கொள்கையும் மாறுபாடாக இருந்ததால் அவரைச் சந்தித்துப் பேச விருப்பமில்லாமல் இத்தாலிக்குத் திரும்பினார்.

இத்தாலியில் இருந்து ஸ்விட்ஸர்லாந்துக்குப் பயணம் ஆனார். ஸ்விட்ஸர்லாந்

துக்குள் மாஜினி நுழையத் தடை விதிக்கப் பட்டது. இதனால் மாஜினி ஸ்விட்ஸர்லாந் துக்குள் செல்லமுடியாமல், இங்கிலாந்திற்குப் பயணமானார். தானே தலைமை தாங்கிப் போரிட்டு ஆஸ்திரியா அரசின் பிடியிலிருந்து மிலானைக் கைப் பற்றியது தான் மாஜினியின் முதல் வெற்றி.

இதற்குப் பிறகு ஆஸ்திரியாவின் பிடியிலிருந்து சில மாநிலங்களைத் தன்னுடைய படை வலிமையினால் சுதந்திர நாடாக ஆக்கினார். சுதந்திரம் பெற்ற பகுதிகளில் உள்ளவர்கள் கட்சிச் சண்டையில் ஈடுபட்டார்கள். இதைத் தடுத்து ஆஸ்திரியா அரசாங்கத்தை முழுவதும் அப்புறப் படுத்தும் வரை ஒற்றுமையாக இருக்கும்படி கேட்டுக் கொண்டார். அவருடைய யோசனையை ஏற்காமல் கட்சிச் சண்டை வளர்ந்தது.

இந்தச் சூழ்நிலையை ஆஸ்திரியா அரசாங்கம் நன்றாகப் பயன்படுத்திக் கொண்டது. இழந்திருந்த தன்னுடைய படை வலிமையை மீண்டும் வலுவாக்கியது. பெரிய படையுடன் சென்று தன்னிடம் இருந்து போன அனைத்துப் பகுதிகளையும் கைப்பற்றி மன்னர் களையும் கைது செய்தது. இந்த நிலையில் தான் மாஜினி இத்தாலி யிலிருந்து ஸ்விட்ஸர்லாந்திற்குப் பயணமாகி அங்கே நுழைய அனுமதிக்காததால் இங்கிலாந்து சென்றார். அங்கிருந்து சிசிலிக்கு 1870ஆம் ஆண்டு புறப்பட்டார். 1848ல் ஏற்பட்ட முதல் வெற்றியில் இருந்து 1870 ஆம் ஆண்டு வரை அவர் சந்தித்த வெற்றிகளும் போராட்டங்களும் கொஞ் சமல்ல. வெற்றி பெற்ற பகுதிகள் கட்சிச் சண்டையினால் மீண்டும் ஆஸ்திரியா அரசாங்கத்திடம் சென்றது. அவர் மனதை மிகவும் பாதித்தது.

வெளிநாடுகளில் இருந்து தன் படைகளை இயக்கிய மாஜினி போர் சமயத்தில் மட்டும் குறிப்பிட்ட பகுதிக்குச் சென்று ஆயுதம் தரித்து தலைமை தாங்கிப் போரிட்டுப் பல இடங்களைக் கைப்பற்றிச் சுதந்திரமடைய வைத்தார். அதன்பின் பொறுப்புகளை மற்றவர்களிடம் ஒப்படைத்து விட்டு மூன்று வல்லரசுகளின் கண்களிலும் படாமல் தப்பி மற்ற நாடுகளில் மறைந்து வாழ்ந்தார். அங்கிருந்தபடியே தனது இத்தாலிய இளைஞர் இயக்கத்தையும் அதைச் சேர்ந்த படைகளையும் இயக்கினார். இந்த நிலையில் பல அரசியல் தலைவர்களைச் சந்தித்துப் பேச சிசிலிக்குப் பயணம் மேற்கொண்டு கப்பலில் சென்றுகொண்டிருந்த போது மாஜினி கைது செய்யப்பட்டார்.

மீண்டும் புரட்சி வெடிக்காமல் இருக்கவும், இத்தாலியோடு மீண்டும் மாஜினி தொடர்பு கொண்டு சுதந்திரப் போராட்டத்தை நடத்தாமல் இருக்கவுமே அவரை வல்லரசு நாடுகளின் அரசர்கள் கைது செய்தார்கள். ஆஸ்திரியப் பகுதிகளில் மாஜினியைக் காணாததால் அங்கு மீண்டும் இத்தாலிய இளைஞர் இயக்கத்தினர் போராட்டங்களை மேற்கொண்டார்கள்.

கைது செய்யப்பட்ட மாஜினி மூன்று மாதம் சிறையில் இருந்தார். இந்த மூன்று மாத காலமும் மாஜினி யாருடனும் தொடர்பு கொள்ளாததால் நம்பிக்கையிழந்த மாஜினியின் விடுதலை வீரர்கள் பலர் அடிபணிந்தார்கள். நிறைய சலுகைகளால் கவரப்பட்ட பலர் அரசாங்க வீரர்களாக மாறினர். மக்களுக்குப் பல

வசதிகளை செய்து கொடுத்து அவர்களை அரசை எதிர்க்க முடியாதபடி செய்தது ஆஸ்திரியா அரசாங்கம்.

விடுதலை அடைந்த மாஜினி தான் உருவாக்கிய வீரர்களும், தேசப்பற்று மிக்கவர்களாக மாற்றப்பட்ட மக்களும் ஆஸ்திரியா அரசின் போக்குகளுக்கு வளைந்து கொடுத்துப் போனதைப் பார்த்து மிகவும் வேதனைப்பட்டார். அரசுக்குப் பயந்தோ அல்லது அரசின் சலுகைகளுக்கு மயங்கியோ பலர் பலியாகலாம். இந்த மாஜினி பலியாக மாட்டான் என்ற உறுதியுடன் இத்தாலி முழுவதும் பிரச்சாரம் செய்து மக்களை ஒன்றுபடுத்த மீண்டும் முயன்றார், மாஜினியின் ஜனநாயகக் கொள்கை இப்பொழுது மீண்டும் பரவி சூடுபிடித்துக் கொண்டாலும், மீண்டும் மன்னராட்சியே அவர் பிடித்த பகுதிகள் அனைத்திலும் ஏற்பட்டுவிட்டது.

கடைசி இரண்டு வருடங்கள் தீவிரமாகப் பிரச்சாரத்தில் ஈடுபட்ட மாஜினி 1872 ஆம் ஆண்டில் மரணமடைந் தார். ஜினோவாவில் மரணமடைந்த அவரது சமாதி பைசா நகரக் கோபுரத்திற்கு அருகே உள்ளது.

இத்தாலி நாட்டை ஒன்றுபடுத்தி சுதந்தர நாடாக மாற்றும் வரை ஓயாது உழைத்தவர் மாஜினி. இளைஞர் களுக்குத் தன்னுடைய பேச்சாலும், எழுந்தாலும், செயல் களாலும் தேசபக்தியை ஊட்டி அவர்களது சிந்தனையை ஒன்றுபடுத்தி, இத்தாலி இளைஞர் இயக்கத்தைத் தோற்றுவித்தார். இத்தாலியின் விடுதலைக்கும். மறு மலர்ச்சிக்கும் முதன் முதலாக வித்திட்டவர் மாஜினி என்று உலக நாடுகள் அனைத்தும் போற்றின. அயல் நாட்டவர்களின் பிடியிலிருந்து விடுவித்து மக்களை மக்களாக வாழவைக்க செயலாற்றிய மாபெரும் வீரர் தான் மாஜினி.

அவர் கண்ட கனவு நனைவாகும் முன்பே இறந்து விட்டார். அடிமைப்பட்டுக் கிடந்து இன்று சுதந்திர பூமியாக மலர்ந்துள்ள பல நாடுகளின் விடுதலை வேட்கைக்கு வித்திட்டு உரம் போட்டவர் என்ற பெருமைக்குரியவர் மாஜினி.



2



நவீன ஜெர்மனியின் நாயகன் பிஸ்மார்க்

இந்தியாவில் இரும்பு மனிதர் என்றால் சர்தார் வல்லபாய் படேலைக் குறிக்கும். இவர் ஒரே இரவில் இந்திய சமஸ்தானங்களை ஒன்றுபடுத்தி இணைத்தவர். அதேபோல உலக அளவில் இரும்பு மனிதர் என்றால் சிதறிக்கிடந்த ஜெர்மனியை ஒரே நாடாகவும், நவீன ஜெர்மனியாகவும் வளப்படுத்திய பிஸ்மார்க்கையே குறிக்கும்.

இரும்பு மனிதரான பிஸ்மார்க் மக்களின் வாக்குகள் மூலம் தேர்ந்தெடுக்கும் மக்களாட்சி முறையை வெறுத்தவர். பிரச்னைகளைத் தீர்க்க சமாதானப் பேச்சுவார்த்தை அதற்குப் பிறகு நடவடிக்கை என்பதெல்லாம்

இவரிடம் கிடையாது. ஆயுதங்களாலேயே புரட்சி செய்யமுடியும் என்ற கொள்கையை உடையவர். அதை நிரூபித்தும் காட்டியவர். இரத்தத்தையும், இரும்பினாலான ஆயுதங்களையும் மிகவும் நேசித்த இவர், ஜெர்மனியை ஒன்று படுத்தியதும் இல்லாமல் தான் பிறந்த நாடான பிரஷ்யாவை விரிவு படுத்தியும் (ஜெர்மன் பல சிறிய துண்டு நாடுகளாக இருந்தபோது பிரஷ்யா அப்போது பெரிய நாடாக இருந்தது.) ஜெர்மனியை வளம் பெறச் செய்தும் மிகச் சிறந்த தேசபக்தராகவும் உலக அளவில் காட்சியளிக்கிறார்.

பதினெட்டாம் நூற்றாண்டின் மத்தியில் ஜெர்மன் நாடு பல சிறு நாடுகளாகப் பிரிந்து அங்கங்கே சிதறிக் கிடந்தன. இச்சிறு நாடுகளுள் பெரிய நாடாக விளங்கியது பிரஷ்யா என்ற நாடாகும். கி. பி. 1740ஆம் ஆண்டு முதல் கி. பி. 1768 ஆம் ஆண்டுவரை மகாபிரெடரிக் என்ற அரசன் பிரஷ்யாவை ஆண்டு வந்தான். இந்தக் கால கட்டத்தில் நெப்போலியன் ஐரோப்பியக் கண்டத்தில் நுழைந்து வெற்றிகளைக் குவித்தபோது ஜெர்மனைச் சேர்ந்த சில சிறு நாடுகளும் அழிந்தன. 1861ஆம் ஆண்டு முதலாம் வில்லியம் என்ற மன்னரின் ஆட்சியில் பிரஷ்யா நாடு இருந்தது. 120 ஆண்டுகளுக்குள் ஜெர்மன் நாட்டுக்குள் இருந்த சிறு நாடுகள் பல அழிந்து பிரஷ்யாவையும் சேர்த்து மொத்தம் 39 நாடுகளே எஞ்சியிருந்தன. இந்த 39 நாடுகளும் சுதந்திர பூமிகளாகும்.

பிஸ்மார்க் கி.பி. 1815 ஆம் ஆண்டு பிரஷ்யாவில் வளமான செல்வர் ஒருவரின் மகனாகப் பிறந்தார். எதை நினைத்தாலும் அதில் உடனே வெற்றிபெறவேண்டும் என்ற தீவிரமான கொள்கையை உடையவர். 1847ஆம் ஆண்டு அரசியல் உலகில் காலடி எடுத்து வைத்த இவர் 1862ஆம் ஆண்டு முதலாம் வில்லியம் மன்னரால் பிரஷ்யாவின் முதல் மந்திரியாக நியமிக்கப்பெற்றார்.

கி.பி. 1862ம் ஆண்டில் பிரஷ்யா நாட்டு பார்லிமெண்டின் உறுப்பினர்களைத் தன் வழிக்குக் கொண்டுவரமுடியாமல் அரசனான முதலாம் வில்லியம் தவித்தார்; இந்தப் பிரச்னைகளைத் தீர்த்து பாராளுமன்ற உறுப்பினர்களைத் தம் வழிக்குக் கொண்டு வரவுமே பிஸ்மார்க்கின் உதவியை நாடினார். பிஸ்மார்க்கை பிரஷ்யாவின் முதல் மந்திரியாக நியமித்து அதன் பொறுப்புகளையும் ஒப்படைத்தார்.

ஆட்டோவான் பிஸ்மார்க் என்ற இயற்பெயரை உடைய பிஸ்மார்க் 25 ஆண்டுகள் பிரஷ்யாவின் முதல் மந்திரியாக இருந்து பிரஷ்யாவை முன்னேற்றமடைந்த நாடுகளில் முதலாவது இடத்தைப் பெறும்படியாக உருவாக்கிக் காட்டினார். பார்லிமெண்டை முற்றிலும் ஒதுக்கினார். மன்னரை மட்டும் மதித்தார். பிரஷ்யாவில் இவர் வைத்தது தான் சட்டம். அவரின் சிறப்பான நிர்வாகம், சீர்திருத்த எண்ணங்கள் இவைகளையே மூலதனமாகக் கொண்டு புதிய பிரஷ்யா உருவானது.

ஆயுதங்கள் மூலமே எதையும் சாதிக்கமுடியும் என்று நம்பிய இவர் 20 வயது நிரம்பிய இளைஞர்கள் ஒவ்வொரு வரையும் கட்டாயமாகப் போர்ப்பயிற்சியில் ஈடுபடுத்தினார். இதனால் இரண்டே ஆண்டுகளுக்குள் புதிய போர்ப்படையும் உருவானது. போர்ப்பயிற்சி பெறாத இளைஞர்களே இல்லாத நாடாக பிரஷ்யாவை உருவாக்கினார். ஏற்கனவே இருந்த ராணுவத்தினருக்கும் புதிய பயிற்சிகள்

போதிக்கப்பட்டன. போர்ச் சாதனங்கள் அதிகமாகச் சேகரிக்கப்பட்டன.

ஜெர்மனியைச் சேர்ந்த 39 நாடுகளில் பல ஆஸ்திரியா அரசின் சர்வாதிகார ஆட்சிக்கு உட்பட்டிருந்தன. இந்த நிலையில் தான் பிரஷ்யாவின் முதல் மந்திரியான பிஸ்மார்க் தனது நாட்டை மேற்கண்டவாறு பலப்படுத்தினார். தவிர இதே கால கட்டத்தில் தான் இத்தாலியில் மாஜினியின் இத்தாலிய இளைஞர் இயக்கம் தோன்றிப் புரட்சி செய்தது. அதை அறிந்த ஜெர்மன் நாட்டு மக்கள், தாங்களும் உணர்ச்சி பெற்று தங்களின் 39 சிறிய நாடுகளையும் ஒரே நாடாக ஜெர்மன் வசமே கொண்டு வர முனைத்தார்கள், முதலில் ஆஸ்திரியாவின் பிடியில் உள்ள ஜெர்மனைச் சேர்ந்த நாடுகளை விடுவிக்க வழி காண வேண்டியிருந்தது.

முதல்வராகப் பொறுப்பேற்ற பிஸ்மார்க் 1865 ஆம் ஆண்டு முதன் முதலாக தன் படைகளுடன் டென்மார்க்கின் மீது படை எடுத்தார். இளைஞர்களுக்கு அளிக்கப் பட்ட போர்ப் பயிற்சியால் ஆவேசத்துடன் போரிட்டு டென்மார்க்கைக் கைப்பற்றினர். அதேபோல ஹால்ஸ்டீன், செக்ஸ்விக் என்ற இரு மாநிலங்களையும் தனது படைகளின் சாகசத்தால் கைப்பற்றினார். டென்மார்க் செக்ஸ்விக், ஹால்ஸ்டீன் என்ற இந்த மூன்று பகுதிகளையும் தன் நாடான பிரஷ்யாவுடன் இணைத்தார்.

அடுத்து ஆஸ்திரியாவின் பிடியில் உள்ள ஜெர்மனியைச் சேர்ந்த சில நாடுகளையும் விடுவிக்க விரும்பினார். அதற்கு ஒரே வழி ஆஸ்திரியாவையே கைப்பற்றினால் தான் முடியும் என்று நினைத்து, அதற்கான ஆயத்தங்களில் பிஸ்மார்க் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது, ஆஸ்திரியாவே பிரஷ்யா மீது போர் தொடுத்தது. டென்மார்க்கை பிரஷ்யா கைப்பற்றியதைத் தாங்க முடியாமல் 1866 ஆம் ஆண்டு திடீரென்று பிரஷ்யாவைத் தாக்கியது.

பிஸ்மார்க் அஞ்சவில்லை. இத்தாலி நாடு சுதந்திர வேட்கையில் இருந்த நேரம். தன்னுடைய கட்சிகளால் தான் மக்கள் ஆட்சியைச் சரியாக நிறுவமுடியவில்லை. ஆனாலும் தன்னைப் போன்ற சுதந்திர வேட்கையுள்ள பிரஷ்யாவிற்கு உதவும் எண்ணங்கொண்ட ரஷ்யாவும், பிரான்சும் இப் போரில் கலந்து கொள்ளாமல் இருக்க ராஜதந்திரத்துடன் விரைவாகப் போர் செய்து அந்த இரு நாடுகளும் ஆஸ்திரியாவிற்குத் துணைக்கு வரும் முன்பே ஆஸ்திரியாவைத் தோற்கடித்தார் பிஸ்மார்க். ஆஸ்திரியாவுடன் சர்வாதிகாரத்தில் இருந்து விடுபட்ட வட ஜெர்மன் நாடுகள் ஒன்று சேர்ந்து கூட்டாட்சியை ஏற்படுத்திக் கொண்டன. தங்கள் தலைமை நாடாக பிரஷ்யாவையும் ஏற்றுக்கொண்டன.

வட ஜெர்மன் நாடுகள் தெற்கு ஜெர்மனுடன் இணைவதைத் தடுப்பதற்காகவும், பிரஷ்யாவின் வளர்ச்சியைக் கண்டு பொறுக்காமலும் பிரான்ஸ் நாட்டு மன்னனான மூன்றாம் நெப்போலியன் பிரஷ்யாமீது போர் தொடுத்தான். ஜெர்மனி நாடுகள் ஒன்றாக இணைய வேண்டும் என்றால் எதிரியான பிரான்ஸையும் தோற்கடிக்க வேண்டும் என்ற ஆயத்த நிலையில்தான் பிஸ்மார்க் இருந்தார்.

தவிர ஸ்பெயின் நாட்டு அரசராக பிரஷ்யாவைச் சேர்ந்த ஒருவரையே நியமிக்கவேண்டும் என்று பிஸ்மார்க் பிரான்ஸைக் கேட்டுக் கொண்டார்.

இதுவும் நெப்போலியனைப் போருக்குத் தூண்டியது. கி.பி. 1570ஆம் ஆண்டு பிரஷ்யா மீது தொடுத்த போரில் பிரான்ஸ் படுதோல்வி அடைந்தது. 50 நாள்கள் நடைபெற்ற இப்போரில் பிஸ்மார்க் தனது படைகளுக்கு ஏற்பட்ட சேதம், செலவு தொகைகள் ஆகியவற்றையும் பிரான்ஸிடமே வசூலித்து விட்டார். லொரைன், மெட்ஸ், அல்கால், ஸ்ட்ராஸ்பர்க் ஆகிய பகுதிகளையும் பிரஷ்யாவிற்குத் தரும்படி ஒப்பந்தமும் செய்து வெற்றி பெற்றார்.

வடஜெர்மன் நாடுகளும், தெற்கு ஜெர்மன் நாடுகளும் இப்போருக்குப் பின் ஒன்றாகச் சேர்ந்தன. ஜெர்மன் புதிய வல்லரசு நாடாகியது.

பிரஷ்யாவின் மன்னரான முதலாம் வில்லியமே ஜெர்மனின் பேரரசராக வர்சேல்ஸில் முடிசூட்டிக் கொண்டார். பிரஷ்யா நாட்டின் முதல் மந்திரியாக இருந்த பிஸ்மார்க் ஜெர்மனி பேரரசின் பிரதமராகப் பதவி யேற்றார். ஜெர்மனைச் சேர்ந்த பிரஷ்யாவை முன்னேற்றியது போலவே அனைத்துச் சிறு நாடுகளும் சேர்ந்த ஜெர்மனியையும் முன்னேற்றப் பாதைக்குக் கொண்டு வந்தார். பிரதமரான அவரிடம் அனைத்து அதிகாரங்களும் இருந்ததால் தான் நினைத்தபடியே வளமான நாடாக ஜெர்மனியை உருவாக்கி விட்டார்.

ஒன்பதே ஆண்டுகளில் சிதறிக் கிடந்த ஜெர்மனியை தன்னுடைய அறிவாலும், திறமையான நடவடிக்கைகளாலும் ஒன்றுபடுத்தியவர் பிஸ்மார்க். போர்க் காலங்களில் எவ்வளவு தீவிரத்துடன் செயல்பட்டாரோ அதே போல பிற்காலத்தில் மற்ற நாடுகளான இத்தாலி, ரஷ்யா, ஆஸ்திரியா ஆகியவைகளுடன் சமாதான ஒப்பந்தம் செய்து கொள்வதிலும் ஈடுபட்டார்.

சமாதான ஒப்பந்தம் செய்துகொண்டு முழுமூச்சுடன் தொடர்ந்து பிரான்சை எதிர்த்தார். எப்போதும் ஜெர்மன் நாடு பலமிக்கதாகக் காட்சியளிக்கும் வகையில் ஆற்றலுடன் பணியாற்றினார்.

பதினெட்டு ஆண்டுகள் ஜெர்மனின் பிரதமராக இருந்த பிஸ்மார்க்கின் ஆற்றலால் உருவானது தான் இன்றைய வளர்ச்சியடைந்துள்ள நாடான ஜெர்மனி.

1888ஆம் ஆண்டின் இறுதியில் இரண்டாவது வில்லியம் ஆட்சிக்கு வந்தார். பிஸ்மார்க் நாட்டின் வளர்ச்சிக்குப் பாடுபட்டார் என்றாலும் அவருடைய போக்கை மன்னரால் பொறுக்கமுடியவில்லை. இதன் விளைவாக பிஸ்மார்க்கை 1890ஆம் ஆண்டு பிரதமர் பதவியில் இருந்து விலக்கினார்.

தோல்வியையே சந்தித்திராதவரும், தேசப்பற்றும் தேச வளர்ச்சியில் ஈடுபாடு கொண்டவருமான மாவீரர் பிஸ்மார்க்கினால் இந்தத் தோல்வியைத் தாங்கிக்கொள்ள முடியவில்லை. பிரதமர் பதவியில் இருந்து தன்னை நீக்கிய தைப் பெரும் அவமானமாகக் கருதினார். அதன் பொருட்டு புதிய அரசைக் கண்டித்து 1897ஆம் ஆண்டு வரை விமர்சனம் செய்துகொண்டு இருந்தார். நவீன ஜெர்மனியை உருவாக்கி வல்லரசு நாடாக உயர்த்திய இரும்பு மனிதன் பிஸ்மார்க் 1898ஆம் ஆண்டு இவ்வுலகை விட்டு மறைந்தார்.

❀❀❀

3



ஜப்பானைச் சீர்திருத்திய மூட்சு ஹீடோ

இன்று உலகில் உள்ள நாடுகளில் தொழில் நுணுக்க வளர்ச்சியிலும் பொருளாதார வளர்ச்சியிலும் முன்னணியில் உள்ள நாடுகளில் ஜப்பானும் ஒன்றாகக் கருதப்படுகிறது. புத்தம் புதிய கண்டுபிடிப்புகளை அன்றாடம் கண்டறிந்து சோர்வில்லாது உழைக்கும் ஜப்பான் நாட்டு மக்கள் நாட்டின் பொருளாதார நிலையை உயர்த்திக் காட்டுகிறார்கள் என்பது உண்மைதான்.

கி.பி. 1548ஆம் ஆண்டு முதல் கி.பி. 1840ஆம் ஆண்டுவரை ஜப்பான் நாடு பொருளாதார நிலையில் மிகவும் தாழ்ந்திருந்தது. ஜப்பான் நாடு

உலகில் உள்ள எந்த ஒரு நாட்டுடனும் தொடர்பின்றி இருந்த காலம் அது. முடியாட்சிப்படி மன்னர் ஒருவர் இருப்பார். பெயரளவிற்குத்தான் அவர் மன்னர். மக்கள் இம் மன்னர்களைக் கடவுளாக நினைத்து வணங்குவார்கள். அவ்வளவுதான் இந்த மன்னர்களுக்குரிய மதிப்பு. மன்னரை "மிகாடோ'' என்று அழைப்பார்கள். நாட்டின் ஆட்சிப் பொறுப்பு முழுவதும் நாட்டின் படைத்தலைவரிடம் இருக்கும். இந்தப் படைத்தலைவரை ஷோகன் என்று அழைப்பார்கள். நாட்டின் அனைத்து அதிகாரங்களும் பெரிய பெரிய நிலச்சுவான்தாரர்களிடமும், 'சமுராய்' என்ற வீரர்களிடமும் இருந்து வந்தன.

நிலச்சுவான்தாரர்களான செல்வர்களும், 'சமுராய்' வீரர்களும் வைத்ததுதான் சட்டம். பெயரளவுக்கு மன்னரை வைத்துக்கொண்டு இவர்களே ஆட்சியைத் தங்கள் அதிகாரத்தால் நடத்தி வந்தார்கள்.

கி.பி. 1550ஆம் ஆண்டு செயிண்ட் சேவியர் என்பவர் ஜப்பான் நாட்டுக்குள் வந்து கிறிஸ்தவ சமயத்தைப் பரப்ப முயற்சி செய்தார். இதைக் கண்டு ஆத்திரமடைந்த அரசு அவரை நாட்டைவிட்டு வெளியேற்றியது. அத்துடன் ஜப்பான் நாட்டுக்குள் அயல் நாட்டினர் நுழைவதற்கும் தடை விதிக்கப்பட்டது. இவ்விதமாக கி. பி. 1550ஆம் ஆண்டு முதல் கி. பி. 18 ஆம் ஆண்டுவரை ஜப்பான் எந்த ஒரு நாட்டுடனும் தொடர்பு கொள்ளாமல் இருந்தது. தவிர, எந்தவொரு அந்நிய நாட்டினையும் ஜப்பானுக்குள் நுழையவிட வில்லை. ஏறக்குறைய முன்னூறு ஆண்டுகள் ஜப்பான் எந்தவித வளர்ச்சியுமின்றி இருந்தது. பணம் படைத்த நிலச்சுவான்தாரர்களும், 'சமுராய்' வீரர்களும் வைத்த சட்டத்தினால் சர்வாதிகாரமும் தலைதூக்கியது.

கி.பி. 1840ஆம் ஆண்டு ஜப்பான் தனது எண்ணத்தை மாற்றிக்கொண்டு முதன்முதலாக ஐரோப்பிய நாடுகளுடன் வாணிபத் தொடர்பை ஏற்படுத்திக் கொண்டது.

அமெரிக்கா, இங்கிலாந்து ஆகிய இரு நாடுகளுடன் தான் முதன் முதலாக ஜப்பான் வியாபாரத் தொடர்பை ஏற்படுத்திக் கொண்டது. இத் தொடர்பால் பெருமளவில் ஜப்பானின் கல்வி, பண்பாடு முதலியவைகளில் புதிய மாறுதல்கள் படரவாயின. கலையும், கலாசாரமும் மாறி ஐரோப்பிய முறையில் ஜப்பான் செல்லத் தொடங்கியது. இதைக் கண்ட ஜப்பானைச் சேர்ந்த சிலர், ஐரோப்பிய முறைகளைப் பின்பற்றிக் கல்வி பயில விரும்பாமல் வேறு நாடுகளுக்குச் சென்றார்கள்.

முன்னூறு ஆண்டுகளுக்குப் பிறகு ஏற்பட்ட வெளியுறவுத் தொடர்பால் குறிப்பாக ஐரோப்பிய முறையைப் பின்பற்றுவதால் ஜப்பான் எந்தவிதத்திலும் முன்னேற முடியாது என்று கருதிச் சிலர் ஜப்பானைவிட்டே வெளியேறினார்கள்.

அமெரிக்கர்கள், இங்கிலாந்துக் காரர்களின் வருகையால் ஜப்பானில் முதன் முதலாக ஆட்சியாளரை மாற்றும் படி எதிர்ப்புக் குரல் ஏற்பட்டது. படைத்தலைவரான ஷோகனை எதிர்த்து மக்கள் கலகம் செய்தார்கள். 1857ல் நடைபெற்ற இக் கலகத்தில் படைத்தலைவரின் ஆட்சிப் பொறுப்பை மன்னரான 'மிகாடோ' ஏற்றுக்கொண்டார்.

அதே ஆண்டு ஜப்பானின் புதிய 'மிகாடோ'வாக மூட்சுஹீடோ என்பவர் பதவி ஏற்றார். மூட்சுஹீடோ சீர்திருத்த எண்ணம் கொண்டவர். ஜப்பான் நாட்டின் அரசராகப் பதவியேற்றதும் முன்பிருந்து வந்த மற்ற அரசர்களைப் போல், பெயரளவுக்கு மன்னராக இருக்க மூட்சுஹீடோ விரும்பவில்லை.

அதுவரை நாட்டின் முழு அதிகாரத்தையும் பெற்று இருந்த நிலச்சுவான்தாரர்களிடமிருந்து அதைப் பறித்தார். அதேபோல 'சமுராய்' வீரர்களிடம் இருந்த அதிகாரங்களும் அகற்றப்பட்டன. அதிகாரங்கள் பறிக்கப்பட்டதால் அவர்கள் செல்வாக்கை இழந்தார்கள். அவர்களின் சர்வாதிகாரத் தன்மைகளும் இதனால் ஒடுக்கப்பட்டன.

1867ல் பொறுப்பேற்ற ஜப்பான் அரசர் முதன் முதலாக பிரிட்டனிலிருந்து நிபுணர்களை அழைத்து வந்து ஜப்பானில் இரயில்வே இருப்புப் பாதைகளை அமைத்தார். தந்திக் கம்பிகளை அமைத்து தொலைபேசி நிலையத்தையும் நிறுவினார்.


நாட்டைப் பாதுகாப்பதற்காக புதிய இராணுவத்தை அமைத்தார். கப்பல் படையை விரிவடையச் செய்தார். ராணுவத்திற்கான தளவாடங்கள் வாங்கப்பட்டன. புதிய வீரர்கள் படைக்காக ஆட்கள் சேர்க்கப்பட்டு ராணுவப் பயிற்சி பெற்றார்கள். கட்டாயமாக எல்லோரும் தொடக்கக் கல்வி பயில வேண்டும் என்று சட்டமியற்றினார். அதன்படி அரசின் செலவில் கட்டாயத் தொடக்கக் கல்வியும், தாய் மொழியான ஜப்பான் மொழியுடன் ஜப்பானின் வளர்ச்சிக்காக ஆங்கிலக் கல்வியும் கற்றுத்தரப்பட்டன.

அரசாங்கமே பல்கலைக் கழகத்தைத் தொடங்கியது. பொறியியல் கல்லூரிகளும் தொழிற்பயிற்சிப்பள்ளிகளும் தொடங்கப் பட்டன. இதற்கான பேராசிரியர்கள் அயல் நாடுகளில் இருந்து வரவழைக்கப் பட்டார்கள். தொழிற் கூடங்கள் அமைக்கத் திட்டங்கள் போடப்பட்டு அதற்கான நிபுணர்கள் பல நாடுகளிலிருந்து வரவழைக்கப்பட்டதுடன் தேவையான சாதனங்களும் வெளிநாட்டில் இருந்து கொண்டு வரப்பட்டன. முற்போக்குச் சிந்தனையும் சோர்வின்றி உழைக்கும் குணமும் கொண்ட மூட்சுஹீடோ, இவ்வளவையும் தனது விடாமுயற்சியால் ஜப்பான் நாட்டில் உருவாக்கினார்.

டோக்கியோவை ஜப்பான் நாட்டுத் தலைநகராக அமைத்தார். வசதிகளும், தொழில் வளர்ச்சியும், கல்வி வளர்ச்சியும் எற்படவே தன் இராணுவத்தினருக்கு ப்ரொக்காரர்கள் மூலம் புதிய பயிற்சி அளிக்க ஏற்பாடு செய்தார். ஜப்பான் நாட்டுச் சட்டத்தைத் திருத்தி அமைத்தார். அரசராகப் பொறுப்பேற்று 21 ஆண்டு காருக்குள் ஜப்பானை வளர்ச்சிப் பாதையில் கொண்டுவந்து சேர்த்துவிட்டார் மூட்சு ஹீடோ.

கி.பி. 1888ஆம் ஆண்டு புதிய அரசியலமைப்பின்படி ஜப்பான் அரசில் பாராளுமன்றம் ஏற்படுத்தப்பட்டது. அவர்களுக்குத் தேவையான ஆணைகளை அவ்வப்போது பிறப்பித்து அவர்களை தன் அதிகாரத்தின் கீழ் இயக்கவு பான மந்திரிகளைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளும், பொறுப்பை அரசர் மூட்சுஹீடோவே வைத்துக்கொண்டார். ராணுவ, நிர்வாகத்தையும் அரசரே ஏற்றுக் கொண்டார்.

4



இத்தாலி தந்த இணையற்ற வீரர் கரிபால்டி

1839ஆம் ஆண்டில் ஒருநாள், லண்டனில் இருந்த இத்தாலி நாட்டு சுதந்திரத்துக்கு வித்திட்ட மாவீரர் மாஜினிக்கு தகவல் ஒன்று வந்தது. "உடனே புறப்பட்டு வருக! மிலான், மஸாய்னா ஆகிய இரு இடங்களில் இத்தாலிய இளைஞர்கள் இயக்கத்தைச் சேர்ந்த போர்ப் படை புரட்சியில் ஈடுபட்டுள்ளது. தலைமை ஏற்று நடத்த உடனே வருக!" என்று. இந்தத் தகவலைக் கொடுத்து மேற்படி இரு இடங்களிலும் புரட்சிப் படைகளை ஒன்று திரட்டி முற்றுகைக்கு ஏற்பாடு செய்தவர் தான் கரிபால்டி என்ற மாவீரர்.

மாஜினியிடம் பயிற்சி பெற்று அவருடைய படைத் தலைவர்களில்